***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 38/2018**

D.W.1 திரு.ஆனந்தகுமார் த/பெ.நல்லகுமார் நாள் – 27.01.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனக்கு சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் தாராபுரம் என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதி சேகர் கரூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான் . எனது மூத்த சகோதரியை தான் சேகர் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதி சேகர் என்னைவிட 10-15 வயது மூத்தவர் என்றால் சரிதான் . என்னுடைய பிறந்த தேதி 14.11.1978 ஆகும். நான் ITI படிப்பு படித்துள்ளேன். நான் ITI 1998ம் ஆண்டு படித்தேன் என்றால் சரிதான் . நான் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் அடமானப்பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 28.08.2010ம் தேதி எழுதப்பட்டது . மேற்படி அடமானப்பத்திரம் எழுதிய தேதியில் நான் புதுக்கோட்டைக்கு வந்திருந்தேனா என்றால் வந்திருந்தேன். பொதுவாக ஆவணங்கள் பதிவு செய்யப்படும்போது பத்திரத்துடன் CD தருவார்கள் என்றால் இல்லை . அடமான தேதியில் எனது அடமானப்பத்திரத்துடன் CD வழங்கப்பட்டது என்றும், வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . அடமானம் எழுதப்பட்ட தேதியில் வேறு ஏதேனும் ஆவணங்கள் எழுதப்பட்டதா என்றால் இல்லை . அடமானப்பத்திரம் வாங்கியதற்கு பின்னிட்டு நான் வாதியை தொடர்பு கொண்டேனா என்றால் போனில் தொடர்பு கொண்டு வட்டிப்பணம் மட்டும் கேட்டேன். நான் போன் செய்து கேட்டதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. அடமானப்பத்திரத்தின் பேரில் நான் பணம் ஏதேனும் திரும்ப பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. அடமானகடன் பத்திரம் எழுதிய தேதியில் யார் யார் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் நான், கதிர்வேலு, கண்ணன் வந்ததிருந்தோம். அடமான கடன் பத்திரத்தில்

கண்டுள்ள சொத்து எவ்வளவு மார்க்கெட் மதிப்பு என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன்.நான் விசாரித்தபோது அந்த சொத்து எவ்வளவு பொருமானம் உள்ளது என்று எனக்கு தெரிய வந்தது என்றால் ரூ .6,00,000/-பொருமானம் உள்ளது என்று தெரிந்து கொண்டேன்.

**இக்கட்டடத்தில் வாதி தரப்பு வழக்கறிஞர் வேணடுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*